**ஏப்ரல் 17**

# *புனித அனிசேத்துஸ் (-166)*

இவர் பத்து ஆண்டுகளாக திருச்சபையை ஆண்டு வந்தார். கர்த்தர் உயிர்த்த விழாவை எப்பொழுது கொண்டாடுவது என்பது பற்றி இவரைக் கலந்து ஆலோசிக்கும்படி 158ஆம் ஆண்டில் புனித பொலிக்காய் உரோமைக்கு வந்தார். இவரது காலத்தில் இரு பதித கொள்கைகள் பரவி தொல்லை கொடுத்தது. பாப்பானவர் இவற்றை வீரத்துடன் எதிர்த்தார். இரண்டு அரசர்கள் வேதகலகத்தை எழுப்பி திருச்சபையை துன்புறுத்தினார்கள். பாப்பானவர் மிகுந்த வேதனைப்பட வேண்டியிருந்தது.

**சிந்தனை:**

தப்பறையான கொள்கைகளை எக்காலத்திலும் காணலாம். கிறிஸ்தவர்கள் ஞான அதிகாரிகளைக் கலந்தாலோசித்து தப்பறையை வீரத்துடன் எதிர்த்துப் போராட வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, ஆர்வமுள்ள இல்லற அப்போஸ்தலர்களை திருச்சபைக்கு தாரும்.